கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 38/2017**

திருமதி.சுமதி (D.W –3) **4.2.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். என்ன பரிகாரம் கூறப்பட்டுள்ளது என்றால் பாகப்பிரிவினை பரிகாரம் கூறப்பட்டுள்ளது. என் உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் நான்கு நபர்கள் ரத்தினசாமி, கோவிந்தசாமி, சுமதி, ராஜேஸ்வரி ஆகியோர். எந்த வருடம் நான் பிறந்தேன் என்றால் 1969 ல் பிறந்தேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1979 இல் நடந்த சங்கதிகளை சொல்லி உள்ளேன். அது யார் சொல்லி தெரியும் என்றால் என்னுடைய அப்பா சொல்லி தெரியும். ராமசாமி என்ன தொழில் செய்து வந்தார் என்றால் கதர் கடைக்கு வேலைக்கு சென்று கொண்டு சென்று வந்தார். அதன் பிறகு சிவ சண்முகம் என்ற பெயரில் சலவை பட்டறை ஆரம்பித்து நடத்தி வந்தார்.எந்த வருடம் சிவ சண்முகம் சலவைப் பட்டறையை என்னுடைய அப்பா ஆரம்பித்தார் என்றால் 1979 ல் ஆரம்பித்தார். அந்த சமயத்தில் என் அப்பாவுடன் எத்தனை பங்குதாரர்கள் இருந்தார்கள் என்றால் யாரும் கிடையாது. என் அப்பா தனிப்பட்ட முறையில் அதை செய்து வந்தார்.

2. என் சகோதரர்கள் இருவரும் என்ன தொழில் செய்து வந்தார்கள் என்றால் ரத்தினசாமி கம்பெனி தொழிலையும் சிறிய அண்ணா ஒர்க்சாப் மற்றும் பலத் தொழில்களை செய்து வந்தார். என்னுடைய இரு சகோதரர்களும் சிறுவயதில் இருந்து என்னுடைய அப்பாவிற்கு துணையாக இருந்து சலவை பட்டறையில் வேலை பார்த்து வந்தார்கள் என்றால் தவறு. தாவா சொத்தை ராமசாமி எப்போது கிரயம் பெற்றார் என்றால் 1983 ஆம் வருடம் கிரையம் பெற்றார். தாவா சொத்தில்

அதன் பிறகு என்னுடைய அப்பா மற்றும் என்னுடைய இரு சகோதரர்களும் சேர்ந்து ராஜேஸ்வரி சலவை பட்டறை என்ற தொழில் செய்து வந்தார்கள் என்றால் தவறு. ராமசாமி எந்த வருடம் இறந்து போனார் என்றால் 25.12.2011 இல் இறந்து போனார். அவர் இறப்பதற்கு முன்பு உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்தாரா என்றால் தவறு. அவர் இறக்கும் சமயத்தில் நல்ல மனநிலையிலும், நல்ல ஆரோக்கியத்துடனும் இருந்து வந்தார். முதல் விசாரணை வாக்குமூலத்தில் கடைசி பத்து நாட்கள் இறப்பதற்கு முன்பு என்னுடைய அப்பா உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்தார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரி. பத்து நாட்களுக்கு முன்பு அவருக்கு ஹார்ட் அட்டாக் வந்தது. என்னுடைய அப்பா இறப்பதற்கு முன்பு இரண்டு வருடங்களாக உடல்நிலை பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருந்து சிகிச்சை எடுத்து வந்தார் என்றால் தவறு.

3. அந்த சமயத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவருடைய மனைவி பெயருக்கு எழுதுவதற்காக நான் உடனிருந்து உதவி செய்தேன் என்றால் தவறு. தாவா சொத்தை பொறுத்து ஏற்பட்ட கடனைப் பொறுத்து என்னுடைய அப்பாவின் வாரிசுதாரர்கள் அனைவருக்கும் வங்கியில் இருந்து அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். அந்த சமயத்தில் அந்த கடன் தொகையை அனைத்து வாரிசுதாரர்களும் சரிசமமாக பிரித்து கட்டுவதாக முடிவு செய்து ஒப்புக்கொள்ளப்பட்டது என்றால் தவறு. வங்கி கடன் நிலுவை தொகையை யார் செலுத்தினார்கள் என்றால் என்னுடைய அம்மா செலுத்தினார்.என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்னுடைய அம்மாவிற்கு நானும் என்னுடைய கணவரும் கடன் தொகை செலுத்திய தேதியில் பணம் கொடுத்து உதவி செய்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரி. எல்லா பாகதாரர்களும் சேர்ந்து தான் வங்கி கடனை பகிர்ந்து செலுத்தினோம் என்றால் தவறு. அம்மா மட்டும்தான் செலுத்தினார். நானும் என் கணவரும் தொகையைக் கொடுத்தோம் என்னுடைய அம்மா கடனை திருப்பி செலுத்தினார்

4. 22.11.2016 ஆம் தேதி தாவா சொத்தை என்னுடைய அம்மா என்னுடைய மகன் பெயருக்கு தான செட்டில்மெண்ட் மூலம் பாத்திய படுத்தி கொடுத்துள்ளார்

என்றால் சரி. அந்த தான செட்டில் மெண்ட் பத்திரத்தில் வங்கியின் மூலம் கடன் அடைக்கப்பட்டு பெறப்பட்ட சொத்துடன் சேர்த்து வேறொரு சொத்தும் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரி. எதற்காக என்னுடைய அம்மாவும் நானும் சேர்ந்து தான செட்டில்மெண்ட் மூலம் இரண்டு சொத்துக்களை ஒரே சமயத்தில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றால் என் பெயரில் உள்ள சொத்தை நான் என் மகனுக்கு எழுதிக் கொடுக்க விருப்பப்பட்டேன், என்னுடைய அம்மாவும் விருப்பம் இருந்ததால் இரண்டு சொத்துக்களும் சேர்த்து என் மகன் பெயரில் தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது. கூட்டு குடும்ப சொத்தை அபகரிக்கவேண்டி நான் என் அம்மாவுடன் சேர்ந்து தாவா சொத்தை மோசடியாக என்னுடைய மகன் பெயரில் தான செட்டில்மெண்ட் மூலம் ஏற்படுத்தி உள்ளோம் என்றால் தவறு.

5. இந்த சொத்துக்களைத் தவிர இறந்து போன என்னுடைய தகப்பனார் ராமசாமி 9ம் பிரதிவாதி நிறுவனத்தில் தொகைகளை வைப்பீடு செய்துள்ளார் என்றால் சரி அதை என்னுடைய அம்மா பெயருக்கு என்னுடைய அப்பா எழுதிக் கொடுத்துள்ளார். அந்த தொகை முழுவதும் 9 ம் பிரதிவாதியிடம் தான் தற்போது உள்ளது என்றால் சரியல்ல. அந்த சொத்து என் அம்மா பெயரில் வந்து அவர் அவருடைய பேரன் பெயருக்கு மாற்றி விட்டார் வழக்கு நிலுவையில் உள்ளதால் ஒன்பதாம் பிரதிவாதி வைப்புத்தொகை முழுவதையும் வைத்துள்ளார் என்றால் தவறு. தாவா சொத்தில் இறந்து போன ராமசாமியின் அனைத்து வாரிசுகளுக்கும் சரிபாகமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய அப்பாவின் உடல் நிலையை சாதகமாக வைத்துக் கொண்டு சொத்துக்களை அம்மா பெயரில் தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் மாற்றி என் மகன் பெயரில் சொத்துக்கள் மாற்றம் செய்துள்ளது செல்லாது மற்ற வாரிசுதாரர்களை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்து மற்றும் ஒன்பதாவது பிரதிவாதியிடம் உள்ள பங்கு தொகை முழுவதும் இறந்து போன ராமசாமியின் வாரிசுதாரர்கள் அனைவருக்கும் சரிசமமாக பிரித்து செல்லும் என்றால் தவறு.

**6 ம் பிரதிவாதி குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்து இறந்து போன என்னுடைய தகப்பனாரின் சுய சம்பாதித்த சொத்து என்றால் சரி. ஒன்பதாம் பிரிதிவாதியிடம் உள்ள பங்கு தொகையும் என்னுடைய தகப்பனாரின் தனிப்பட்ட தொகையிலிருந்து பெறப்பட்டது என்றால் சரி. 2011 ஆம் வருடத்தில் இருந்து என்னுடைய தகப்பனாருக்கு உடல் நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு படுத்த படுக்கையாக இருந்து வந்தார் என்றால் தவறு. என்னுடைய தகப்பனார் இறப்பதற்கு முன்பு சுயநினைவு இல்லாமல் எந்த ஒரு முடிவும் எடுக்க முடியாத சூழ்நிலையில் படுத்த படுக்கையாக இருந்து வந்தார் என்றால் தவறு.ஏழாம் பிரதிவாதி வங்கியில் என்னுடைய தகப்பனார் தொழிலுக்காக கடன் வாங்கி திருப்பி செலுத்தாமல் இறந்து போனார் என்றால் சரி. தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தினால் தான் என்னுடைய தகப்பனாரால் வங்கியில் பெற்ற கடனை திருப்பி செலுத்த முடியவில்லை என்றால் சரி. என்னுடைய தகப்பனார் இறக்கும் தருவாயில் அவரிடம் தொகை ஏதும் இருந்ததா என்றால் வைத்திருக்கலாம். என்னுடைய அம்மா வேலைக்கு எதுவும் செல்லவில்லை வீட்டில் இருந்து வீட்டை பராமரித்து வந்தார் என்றால் சரி. என் அம்மாவிடம் சொத்துக்கலோ கையிருப்பில் தொகையோ இருந்ததா என்றால்தெரியாது. அம்மாவுக்கு தான் தெரியும். என் அம்மா என்னுடன் தான் வசித்து வருகிறார் என்றால் சரி. நானும் என்னுடைய அம்மாவும் ஒரே வழக்கறிஞரை வழக்கிற்காக நியமனம் செய்துள்ளோம் என்றால் ஆமாம். 7 ம் பிரதிவாதி வங்கியில் என்னுடைய தகப்பனார் பெற்ற கடன் நிலுவை வட்டி தொகையான ரூபாய் 42 லட்சத்தை திருப்பி செலுத்தக்கூடிய வசதி அந்த சமயத்தில் என்னிடம் இல்லை என்றால் தவறு. வசதி இருந்தது ஏழாம் பிரதிவாதி வங்கியில் இருந்த கடன் குடும்பப் பொதுக் கடன் என்பதால் இறந்து போன என் அப்பாவின் வாரிசுதாரர்களான நாங்கள் நான்கு பேரும் சேர்ந்து தான் கடனை திருப்பி செலுத்தினோம் என்றால் தவறு. அம்மா கட்டினார். பணம் நான் கொடுத்தேன். வங்கி கடனை என் அப்பாவின் வாரிசுதாரர்கள் அனைவரும் சேர்ந்து சரிசமமாக திருப்பி செலுத்தினார்கள் என்றால் தவறு. 25.7.2011 ஆம்

வருடம் என்னுடைய தகப்பனார் தாவா சொத்தை என்னுடைய தாயார் பெயருக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்வதே பொய் என்றால் சரியல்ல. 25.7.2011 ஆம் தேதி ஒன்பதாவது பிரிவாதியில் உள்ள பங்கு தொகையையும் வர்த்தமான் கடிதம் மூலம் என்னுடைய அப்பா என் அம்மாவிற்கு எழுதிக் கொடுத்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. விசாரணை சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் ஆமாம். முதல் விசாரணை வாக்குமூலத்தின் பத்தாவது பத்தியில் முதல் பத்து வரியில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது என்றால் தவறு.தாவா சொத்தைப் பொறுத்து என்னுடைய அம்மா பெயருக்கு ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் வர்த்தமான் கடிதம் செல்லாது என்ற போது என்னுடைய அம்மா அந்த சொத்தை என் மகனுக்கு தான செட்டில் மூலம் பாத்திய படுத்தி கொடுத்ததே செல்லாது என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை தாவா சொத்துக்கள் முழுவதும் இறந்து போன என் அப்பாவின் அனைத்து வாரிசுதாரர்களும் கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் தவறு. தாவாவில் கோரி உள்ளவாறு தாவா சொத்துக்கள் ஐந்து பாகமாக பிரித்து அனைத்து பாகதாரர்களும் சரிசமமாக பிரித்துக் கொடுக்க வேண்டும் என்றால் தவறு. தாவா சொத்திற்கும் என் மகனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.02.04 16:30:59 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.